DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–105/2023

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.உமையம்மாள் @ உமையாள் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present)

23.02.2026 – 04.00 PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் சேரந்தை கிராமத்தில் குடியிருந்து உப்பளத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 வரை எனக்கு தெரியும்.

2. வாலிநோக்கத்திலிலுள்ள உப்பளத்தில் தினக்கூலியாக நானும், எனது கணவர் வீரனும் வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரிலிருந்து உப்பளத்திற்கு நடந்தோ, வண்டியிலோ செல்வது வழக்கம். கடந்த 09.03.2023ம் தேதியன்று நான் வீட்டிலிருந்த போது வடிவேல் மற்றும் தங்கமும் எனக்கு நேரடியாக வந்து எனது கணவருக்கு கிருஷ்ணாபுரம் விலக்கு ரோட்டில் வைத்து எனது கணவர் உப்பள வேலையை முடித்து விட்டு சைக்கிளில் வந்த கொண்டிருந்த போது மதியம் 12. 00 மணியளவில் குட்டியானை வாகனம் ஏர்வாடி நோக்கி வந்த வாகனம் மோதி எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டு விட்டதாக சொன்னார்கள். மேற்படி தகவல் தெரிந்தவுடன் நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். நான் போய் பார்க்கும் போது எனது கணவர் விபத்து ஏற்பட்டு சாலையில் கிடந்தார்.

3. அவருக்கு தலையின் பிடறி பகுதி மற்றும் வலது கால் ஆகிய இடங்களில் காயங்கள் இருந்தது. எனது கணவர் ஓட்டிச்சென்ற சைக்கிளும்

சம்பவ இடத்தில் கிடந்தது. விபத்து ஏற்படுத்திய வாகனம் அந்த இடத்தில் இல்லை அது சென்று விட்டதாக சொன்னார்கள். விபத்து ஏற்படுத்திய வாகனம் வாலிநோக்கம் ஊரைச் சேர்ந்த வாகனம் என்று சொன்னார்கள். நான் அந்த வாகனத்தையும், வாகன ஓட்டுநரையும் பார்க்கவில்லை. அந்த வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. எனக்கு படிப்பறிவு இல்லை. எனது கணவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். எனது கணவர் சிகிச்சையின் போது இறந்து விட்டார்.

4. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்று எனக்கு தற்போது நினைவில் இல்லை. அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1 ஆகும். போலீசார் விசாரணை செய்தார்கள்.

<u>பிறழ் சாட்சி:–</u>

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

போலீசார் விசாரணையின் போது இவ்வழக்கு சம்பவம் 09.03.2023ம் தேதி 12.15 மணியளவில் நடந்தது என்றால் சரிதான். மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபர் செய்யது முகமது மகன் அகமது என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வாகனத்தின் பதிவெண் TN 65 AV 7269 என்ற எண்ணுள்ள பொலிரோ மேக்ஸி டிரக் + என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாகனமானது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்று என் கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த சம்பவத்தை என் கணவருக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த ராமசாமி மகன் தங்கம், கனபதி மகன் வடிவேல் மற்றும் டி. கிருஷ்ணாபுரத்தை சேர்ந்த சம்பவ விலக்கு ரோட்டில் நின்று இருந்த வேலு மகன் அரசபாண்டி என்பவரும் மேற்படி சம்பவத்தை பார்த்ததாக போலீசார்

விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் தான் 108ற்கு தகவல் சொன்னார்கள் என்றால் சரிதான். எனது கணவர் சிகிச்சையின் போது வாய் பேச முடியாத நிலையில் இருந்ததால் நடந்த சம்பவம் பற்றி நான் வாக்குமூலம் கொடுத்தேன் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த சம்பவம் பற்றி போலீசார் என்னிடம் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரணையின் போது தற்போது குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள தகவல் அனைத்தும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது போலீசாரிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் நான் கையொபபம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் தொடர்புடைய விவரங்களை அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்களை தான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். கேள்விபட்டேன். எனது கணவர் இறக்கும் போது அவருக்கு 70 வயது இருக்கும் என்றால் 56 வயது ஆனது. எனது கணவர் விவசாயம் செய்கிறாரா என்றால் இல்லை. தினக்கூலி. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும விபத்து காப்பீட்டிற்காக போலீசார் பதிவ செய்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கம் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவர் ஏதோ அடையாளம் தெரியாது வாகனத்தினால் ஏற்பட்ட விபத்திற்கு இழப்பீடு பெறுவதற்காக இந்த வாகனத்தின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ஓம்/சாதுசிவசுப்பிரமணியன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி